மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதற்கெல்லாம் உங்களுக்கு உரிமை கிடையாது. இது கேள்வி நேரம் இல்லை. அமைச்சர் அவர்களும் பதில் சொல்லி முடித்துவிட்டார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; தலைவர் அவர்களே குற்றச்சாட்டுகள் இருந்தால், விசாரணையும் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திருவாளர்கள் என். கிட்டப்பா, செ. சிவசாமி, ப. சந்திரன், எம். ஏ. லத்தீப் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், கு. ரமணி, மு. ஆறுமுகம் ஆகியோர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். பேரவையின் முன்னுள்ள கேள்வி,

"மானியக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 1,75,69,28,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(6) அறிவிப்பு.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு பேரவை துணைத்தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஜப்பான் செல்லவேண்டி இருப்பதால் அவரது மானியக்

கோரிக்கைகளை வேறு தேதிகளில் மாற்றி எடுத்துக்கொள்ளும்படி கேட்டு இருப்பதால் 1978ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3ஆம் நாள் அன்று அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்படுகின்றன :—

13—3—1978 திங்கட்கிழமை	13 நீதி நிர்வாகம்.
	14 சிறைச்சாலைகள்.
14—3—1978 செவ்வாய்க் கிழமை.	2 மாநில ஆயத் தீர்வை.
	4 பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.
	5 முத்திரைத்தாள்கள்— நிர்வாகம்.
	58 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.
27—3—1978 திங்கட்கிழமை	21 மீனளம்.
	35 நுகர் பொருள் வழங்கல்
	57 பல்வகை மூலதனச் செலவு.
28—3—1978 செவ்வாய்க் கிழமை.	6 பத்திரப் பதிவு.
	23 கூட்டுறவு.
	25 சின்கோனா.
	45 காட்டு வளத்துறை.
	56 காட்டுவள மூலதனச் செலவு

1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28ஆம் நாள் அன்று வாக்கெடுப்புக்கு விடப்படும். மற்ற மானியக் கோரிக்கைகளிலும், மற்ற நிகழ்ச்சிகளிலும் மாறுதல் இல்லை. மற்ற நாட்களின் நிகழ்ச்சிகளிலும் மாறுதல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—14 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.